2015 ஆகஸ்ட் 31]

(ஆ) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான புதிய தொழில் கொள்கை உருவாக்குதல் மற்றும் கிண்டி தொழிற்பேட்டையில் அடுக்குமாடி தொழில் வளாகம் உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னம்பிக்கையுடன் ஒவ்வொரு மனிதனும் வாழ வகை செய்வதும், அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கக்கூடியதுமான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை ஊக்குவித்து, சிறு முதலீட்டாளர்களின் நண்பனாக எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை மேம்படுத்தும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்:

1. அரசின் தொலைநோக்குக் கொள்கைகள் மற்றும் மக்களின் தொழில் புரியும் ஆவலான மனநிலை ஆகியவை மாநிலத்தில் மிகப் பெரிய அளவில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைவதற்கு அடித்தளமாக அமைந்துள்ளன. 67,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகளைக் கொண்ட, பதிவு செய்யப்பட்ட 11 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) அதிகபட்சமாக 60 இலட்சம் நபர்களுக்கு மேல் வேலைவாய்ப்பினை வழங்கி, தமிழ்நாட்டை இந்தியாவின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் முதன்மை மாநிலமாக விளங்கச் செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டினை ஆசியாவின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தலைநகரமாக உருவாக்கிட, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான புதிய தொழில் கொள்கை உருவாக்கப்படும். இந்தப் புதிய கொள்கையானது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் எதிர்கொண்டு வரும் சவால்களுக்குத் தீர்வு காண்பதோடு அல்லாமல், தொலைநோக்குப் பார்வை 2023–ன் குறிக்கோளினை எளிதாக அடையவும் வழிவகுக்கும். மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஏற்கெனவே உயர் வளர்ச்சி அடைந்துள்ள நிலையில்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2015 ஆகஸ்ட் 31

இத்துறையின் உலக அளவிலான போட்டித் திறனை அதிகரிக்கும் வகையில் துறை சார்ந்த பன்னாட்டு அளவிலான ஆய்வு மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தற்போதைய போட்டித் திறனை மதிப்பிட்டு உலக அளவில் செயல்பட்டுவரும் இத்தகைய தொழில் நிறுவனங்களின் போட்டித் திறனுடன் ஒப்பிட்டு சிறந்த நிலை அடைய இந்த ஆய்வு பயன்படும்.

முற்பகல் 11–10

2. 1958 ஆம் ஆண்டில், கிண்டி தொழிற்பேட்டை முதன்முதலாக தமிழக அரசால், சென்னை நகரின் மையப் பகுதியில் உருவாக்கப்பட்டது. இத்தொழிற்பேட்டையில் கிடைமட்ட விரிவாக்கத்திற்கான நிலம் பற்றாக்குறையாக இருப்பதால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்வதற்கும், மேலும் கிண்டி தொழிற்பேட்டையில் ஏற்கெனவே இயங்கிவரும் நிறுவனங்களின் விடுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அடுக்குமாடி தொழில் வளாகம் ஏற்படுத்தித் தருவது அவசியமாகிறது. எனவே, கிண்டி தொழிற்பேட்டையில் ஓர் அடுக்குமாடி தொழில் வளாகம், சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

5. புதிய வருவாய் வட்டங்கள், கோட்டங்கள் உருவாக்குதல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான புதிய தொழில் கொள்கை மற்றும் மேம்பாடு குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாடு சுதந்திரம் அடைந்து மத்தியிலே ஆட்சி அமைந்தபோது, பிரதமர் நேரு அவர்கள் ஆட்சியின் தொடக்கத்திலே ஒன்றைச் சொன்னார். 'நம் ஆட்சியின் பிரதான இலட்சியமாய், நீண்ட இலட்சியமாய் நாம் ஒன்றைக் கருத்திலே கொள்ளவேண்டும். பெரும் மக்கள் தொகையை உள்ளடக்கிய ஜனநாயக நாட்டிலே, கடைசி மனிதனுக்கு, கடைசி எளிய குடிமகனுக்கு, இந்த ஆட்சியின், அதிகாரத்தின் நெருக்கத்தை உருவாக்குவதுதான், ஜனநாயகத்தின் வெற்றியாக இருக்கமுடியும்' என்று சொன்னார்.